யாழ்ப்பாணம்.

பருவவெளியீட்டுப் பகுதி
யாழ்ப்பாண பொதுசன நூலகம்

★ விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

மலர் 26 பங்குனி 18 ஐ. ஆண்டு 27 இதழ் 49
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 31-3 84

## யாழ். அரச அதிபர் இடமாற்றம் 3 மாதங்களுக்கு ஒத்திவைப்பு!

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவின் இடமாற்றம் தற்காலிகமாக ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதம் முதலாம் திகதியுடன் கொழும்புக்கு திரு. தேவநேசன் நேசையா இடமாற்றம் செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே. அவருக்கு பதிலாக திருகோணமலையில் இருந்த திரு. கமலஸ்வேர்ரன் யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்பட்டிருந்தார்.

திரு. நேசையாவின் இடமாற்றத்தை இங்குள்ள பொது ஸ்தாபனங்களும், பொதுமக்களும் பரவலாக ஆட்சேபித்து வந்தனர்.

இப்பொழுது கிடைத்துள்ள செய்தியின்படி திரு. நேசையாவின் இடமாற்றம் தற்காலிகமாக ரத்துச்செய்யப் பட்டுள்ளது.

மேலும் மூன்று மாதங்களுக்கு திரு. நேசையாவின் சேவை யாழ்ப்பாணத்துக்கு கிடைக்கும்வகையில் இடமாற்றம் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

# அச்சுவேலியில் நேற்றுமுன்தினம் 8 கடைகளும் பெட்ரோல்நிலையமும் முற்றுகத் தீக்கிரை

(ஏ வி மாணிக்கம்)
அச்சுவேலியில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற தீவைப்புச் சம்பவத்தில் 8 கடைகளும் ஒரு எரிபொருள் விற்பனவு நிலையமும் முற்றுகத்தீக்கிரையாக்கப்பட்டன.

ட்ரக்கிலும்; ஜீப் வண்டியிலும் வந்தவர்களே இச்சம்பவங்களில் ஈடுபட்டதாகச் சொல்லப்படுகிறது.

அச்சுவேலி எரிபொருள் விற்பனவு நிலையத்திலிருந்து பெற்ரோல் போன்ற எரிபொருள் எடுக்கப்பட்டதுடன், அப்பெற்ரோல் நிலையத்துக்குத் தீவைத்ததால் முற்றுக எரிந்துவிட்டது என்றும், மற்றும் புடவைக்கடை, அச்சுவேலி ப. நோ. கூ. சங்கப் புடவைக்கடை, தேநீர்க்கடை, குளிர்பான நிலையம், சப்பாத்துக்கடை, இலை அலுமாரிப்பு நிலையம், 'றெக்கோடிங் பார்', வைக்கோல் போன்ற பொருட்கள் விற்பனை செய்யும் கடை ஆகியனவும் தீக்கிரையாகியுள்ளன.

மேலும், வசாவிளானிலுள்ள மண்ணெண்ணெய் விற்பனவு நிலையம், மயிலிட்டியிலுள்ள எரிபொருள் விற்பனவு நிலையம் ஆகியனவும் தீக்கிரையாக்கப் பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மல்லாகத்தில் இருமாடி வீடுகளும், மயிலிட்டியில் ஒரு வீடும் கற்களால் எறிந்து சேதப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மல்லாகம் எரிபொருள் விற்பனவு நிலையத்துக்குச் சென்ற மேற்படி கோஷ்டியினர் அங்கு எரிபொருள்கள் இல்லாதிருந்ததை அறிந்து திரும்பிச்செல்லும்பொழுதே அப்பகுதி வீடுகளுக்கு கற்களால் எறிந்து தாக்கிவிட்டு சென்றுர்களாம்.

அச்சுவேலி எரிபொருள் நிலையத்தில் பெற்ரோல், அங்கிருந்த ரொக்கப்பணம், மற்றும் புடவை விற்பனை நிலையங்களில் துணிவகைகள் கொள்ளையடித்தபின்னரே தீ மூட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## கருணாநிதி மேல்சபைக்கு தெரிவு

சென்னை
தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி தமிழ்நாடு சட்ட மேலவை உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

சட்டமேலவையில் 7 இடங்களுக்கு நேற்று நடந்த தேர்தலில் அ. தி. மு. க. சார்பில் 5 பேரும் தி. மு. க. சார்பில் ஒருவரும், இந்திராகாங்கிரஸ் சார்பில் ஒருவரும் வெற்றி பெற்றனர். மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர்

(8-ம் பக்கம் பார்க்க)

## பிறேஸில் பிரஜை தலைமன்னாரில் கைது!

(மன்னார்)
தலைமன்னார் - ராமேஸ்வரம் கப்பல் மார்க்கமாக சுமார் ஒரு கிலோ கஞ்சாவை கடத்தி வந்த வெளிநாட்டு உல்லாசப் பயணி ஒருவர் தலைமன்னார் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.

பிறேஸில் நாட்டைச் சேர்ந்த பேலொடா ஜோஷ் பதிரோ என்ற உல்லாசப் பயணியே பொலிசாரினால் கைது செய்யப்பட்டவராகும்.

தலைமன்னார் பகுதியில் காணப்படும் தாராகன் போல்

(8-ம் பக்கம் பார்க்க

# அச்சுவேலி, மயிலிட்டி, வசாவிளான் தீவைப்பு, கொள்ளை பற்றி விசாரணை நடத்த உத்தரவு

### பாதிக்கப்பட்டோரை புகார்செய்ய கோரிக்கை

(ஏ வி மாணிக்கம்)
அச்சுவேலி, மயிலிட்டி, வசாவிளான் ஆகிய இடங்களில் நடைபெற்ற தீவைப்பு, கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்துமாறு யாழ் பொலிஸ் அதிபர் திரு ரி இ ஆனந்தராசா காங்கேசன்துறை உதவிப்பொலிஸ் அதிபரைப் பணித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு ட்ரக்கிலும், ஜீப்பிலும் வந்த கோஷ்டியினர் இச்சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவந்ததைத் தொடர்ந்து பொலிஸ் அதிபர் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவித்தார்.

வடபிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபரின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற மகாநாட்டில யாழ் குடாநாட்டில் எழுந்துள்ள பதட்டநிலை குறித்து ஆராயப்பட்டது.

நேற்றும், நேற்று முன்தினமும் இம்மாநாடு நடைபெற்றது.

யாழ். பொலிஸ் அதிபர் பிரிவிலுள்ள பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், உதவிப் பொலிஸ் அதிபர்கள் இம்மாநாட்டில் சமுகமளித்திருந்தனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## இந்த அகதிகள் மீண்டும் கைதடியில் தஞ்சம்!

(சாவகச்சேரி)
கைதடி அகதிகள் முகாமில் இருந்து பருத்தித்துறை அகதிகள் முகாமிற்கு சென்ற சுமார் 10 அகதிகள் குடும்பங்கள் மீண்டும் கைதடி அகதிகள் முகாமில் தஞ்சம்கோரி வந்துள்ளனர்.

அகதிகள் புனர்வாழ்வுத்

(8ம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் குழாய் கிணறு வசதிகள்

(வவுனியா)
குடிநீர் சுகாதார வசதிகளை ஏற்படுத்தும் நோக்குடன் வவுனியா பிரதேச அபிவிருத்தி சபையின் அனுசரணையுடன் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினர் மலகூடங்கள், குழாய்க்கிணறுகளை அமைத்து வருகின்றனர்.

இதுவரை ஆயிரம் மலகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 305 குழாய்க்கிணறுகள் திறக்கப்பட்டுள்ளன. மேலும் 50 குழாய்க்கிணறுகள் அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

வவுனியா நகர எல்லைக்குட்

8-ம் பக்கம் பார்க்க.

திருமண அழைப்பு

மணமகன்
செல்வன் கமலநாதன்
(சட்டத்தரணி)

மணமகள்
செல்வி வசந்தா

காலம்:
02-04-84 திங்கட்கிழமை (பங்குனி 20-ம் நாள்)

நேரம்:
முற்பகல் 10-47 - 12-46 இல் வரும் சுபவேளை

இடம்:
யாழ். திருநெல்வேலி சிவனாலயம்

வரவேற்பு உபசாரம்:
கிளிநொச்சி திருவையாறில் உள்ள மணமகள் இல்லத்தில் மாலை 4-30 மணிக்கு

உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் சகல வைபவங்களிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

குறிப்பு :- தனிப்பட்ட அழைப்புகள் அனுப்ப முடியாமைக்கு வருந்துகிறோம்.

தங்கள் நல்வரவை நாடும்

திருமதி நா. வேலுப்பிள்ளை
8ம்-குறுக்கு வீதி,
பருத்தித்துறை.

வீ ஆனந்தசங்கரியும் பாரியாரும்
7/3 திருவையாறு
கிளிநொச்சி

(1674)

# காங்கேசனில் யாழ். மாவட்டத்துக்கு தேவையான முழு மின்சாரம் வழங்கக்கூடிய மின் உற்பத்தி நிலையம்!

(மாவிட்டபுரம்)
யாழ் மாவட்டம் முழுவதற்கும் மின்சாரம் வழங்கக்கூடிய உயர்சக்தி மின்உற்பத்தி நிலையம் காங்கேசன்துறையில் விரைவில் இயங்க ஆரம்பிக்க உள்ளது.

காங்கேசன்துறை லங்கா சீமெந்து லிமிட்டெட்டின் ஆதரவில் அதன் சீமெந்து ஆலைக்கான மின்சாரத்தைபெறும் முகமாக அமைக்கப்பட்டு வரும் இந்த மின்உற்பத்தி நிலையம் அடுத்த மாதத்தில் இயங்க ஆரம்பிக்கும் என நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது.

மின்உற்பத்தி நிலையம் முதல் கட்டமாக 14 'மெகவாட்ஸ்' மின்சக்தியை உற்பத்திசெய்யுமெனவும், பின்னர் இரண்டாவது கட்டமும் பூர்த்திசெய்யப்பட்டதும் 28 மெகவாட்ஸ் மின்சக்தி உற்பத்தி செய்யப்படுமெனவும் சீமெந்துஆலைக்கு உபயோகப்படுத்தும் மின்சாரத்தைவிட மேலதிக மின்சாரத்தை மின்சார சபையின் ஊடாக பொதுமக்கள் பாவனைக்குவிடக்கூடியதாக இருக்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மின்உற்பத்தி நிலையம் யாழ். மாவட்டம் முழுவதற்கும் மின்சாரத்தை வழங்கக்கூடியதாக அமையுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. மின் உற்பத்தி நிலையத்திற்குத் தேவையான கனரக ஓயில் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தின் 'மகாவலி' என்னும் கப்பல் மூலம் வந்து சேர்ந்துள்ளது.

ஜேர்மன் தொழில்நுட்ப நிபுணர்களின் நேரடி மேற்பார்வையில் இந்த மின் உற்பத்தி நிலையத்தின் அமைப்பு வேலைகள் இடம்பெற்று பூர்த்தியடைந்துள்ளது.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

A-50, கேம்பிரிஜ் பிரிகளர் விற்பனைக்குண்டு. அல்லது மைனர் காருக்கு மாற்றுவதற்குண்டு. இல 8, முதலியார் ஒழுங்கை, நாவலர்வீதி, யாழ்ப்பாணம். 1672

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்கு முன்பாக, குமாரகோவில்வீதியில் 4½பரப்பு புக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- V. சுப்பிரமணியம் 451. காங்கேசன் துறை வீதி, மாவிட்டபுரம். 1676

உரும்பிராய் சந்திக்கு அருகாமையில் 1½பரப்பு காணியும் வீடும் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: க. செல்வநிலையம் உரும்பிராய்சந்தி, உரும்பிராய். 1677

## தேவை

யாழ். பிரதான பஸ் நிலையத்துக்கு அருகாமையில் புதிதாக அமைக்கப்படும் ரெடிமேட் பெண்கள் / பிள்ளைகள் ஆடைகள் நிலையத்திற்கு அனுபவமிக்கவர்கள் தேவை. சகல உடுப்புகளும் தைக்கத் தெரிந்தவர்களும், ஸ்மொக்கிங், எம்பிரொய்டறி தெரிந்தவர்களும் எல்லாவித உடுப்புகளுக்கும் கட்டர்மாரும் விண்ணப்பிக்கவும். விண்ணப்ப முடிவு திகதி 6-4-1984 விளம்பர இல: 1679 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 1679

## தேவை

தமிழில் இருந்து ஆங்கிலத்துக்கு மொழிபெயர்ப்பதில் அனுபவமுள்ள ஆங்கில தட்டெழுத்தாளர் தேவை. விண்ணப்ப முடிவுத்திகதி 6-4-1984 விளம்பர இல 1680, ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 1680

## சேவை

Bairaha Farm ஹைசெக்ஸ் வேட்டுக் குஞ்சுகள், கோழிகளுக்கு இலவசமாக சொண்டு வெட்டுவதற்கு (Debeaking) உடன் சந்துணரசா and பிறதர்ஸ் ஸ்ரேசன் ரோட், பிரம்படி கொக்குவில் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும் பைரஹா பாம்ஸ், கட்டான. 1651

சகலவிதமான தையல் மெசின்கள், மின்விசிறிகள், குளிர்சாதனப்பெட்டிகள், உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். S. செபஸ்ரியாம்பிள்ளை, உஷா விற்பனை நிலையம், இல. 40, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23600 1644

கலர்பிலிம் கருவ் இலும், மினி லோஜிபோ அல்லம் இலும். கலர் பிலிம் சுருள்களை இரண்டு நாட்களில் Processing Printing செய்ய கொழும்பு ஸ்ருடியோவை நாடுங்கள். மினி விபரங்கள் நேரில். 1582

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

கதிர்காமநாதன்

உமாராணி

அவர்களின் மங்கல நாண் ஏற்றல் கீரிமலை சிவன் கோவிலில் பங்குனித் திங்கள் 20ஆம் நாள் (2-4-1984) பகல் 11-00 — 12-45 மணிவரையில் நிகழ இருப்பதால் மணமக்களை ஆசீர்வதிக்க தங்களையும் அழைக்கின்றோம்.

### விருந்து உபசாரம்

மணமகன் இல்லத்தில் 3-4-1984 மாலை 4-00 - 7-00மணி.
மணமகள் இல்லத்தில் 4-4-1984 மாலை 4-00 - 7-00மணி.

திரு திருமதி
சு. நாகமுத்து
மல்லாகம்.

திரு. திருமதி
சு. அரியரத்தினம்
212, பருத்தித்துறை வீதி,
காங்கேசன்துறை.

1666

## வெளிவருகிறது

# மில்க்வைற் செய்தி நூறுவது இதழ்

நூறு இதழ்களும் வெளிவரக் காரண கர்த்தாக்கள்

உழைக்கும் கரங்களின் உறுதி,
ஆதரவாளரின் அபிமான ஆதரவு,
விற்பனையாளரின் விசால மனவூக்கம்,
அச்சகத்தாரின் அயராத ஒத்துழைப்பு,
அபிமானிகள், அறிவாளிகளின் பாராட்டு,
தொழிலதிபரின் இக்கன வாழ்வு.
செய்தியாசிரியரின் கௌரவ சேவை,
பாடசாலைகள், சனசமூக நிலையங்கள்,
தபால் செலவை அனுப்பி இலவசமாகப் பெறலாம்.
ஏனையோர் மில்க்வைற் மேலுறையை அனுப்பினால் செய்தியை அனுப்புவோம்.

## மில்க்வைற்

யாழ்ப்பாணம்.

## நெஸ்லே ஸ்தாபனத்தாரின் ஆதரவில் Y.W.C.A. ரிம்மர் மண்டபத்தில்

31-3-84 நடைபெறவிருந்த சமையல் செய்முறைகள் தவிர்க்கமுடியாத காரணத்தால்

## பின்போடப்பட்டுள்ளதை

மனவருத்தத்துடன் அறிவிக்கிறோம். 1675

# மக்கள் வங்கி

பிராந்திய தலைமையலுவலகம்
127, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## பகிரங்க ஏல விற்பனவு

1975-ம் ஆண்டின் 13-ம் இலக்க அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 30-ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1961-ம் ஆண்டின் 29-ம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 30-ம் பிரிவின் கீழ் பின்வரும் தீர்மானம் 07—10—1980 அன்று மக்கள் வங்கியின் இயக்குனர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மக்கள் வங்கியின் சார்பில் பிரசித்த நொத்தாரிஸ் செ. சண்முகலிங்கத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1979 மார்ச் 12ஆம் திகதியிடப்பட்ட 484-ம் இலக்க முறியின் பேரால் வரவேண்டிய பணத்தை ஊர்காவற்றுறை பிரதான வீதி, "பாலா பிறதர்ஸ்" என்னும் இடத்தைச் சேர்ந்த சந்தையா சிவபாலன், ஜெயராணி சிவபாலன் என்பவர்கள் செலுத்தத் தவறியுள்ளமையினாலும், தற்போது மக்கள் வங்கிக்கு குறித்த முறியின் பேரால் ரூபா 45261/33 சதம் வரவேண்டியிருப்பதாலும், மக்கள் வங்கியின் இயக்குனர் சபையானது 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் குறித்த வங்கிக்கு குறித்த 484ஆம் இலக்க முறியின் பேரால் ஈடு செய்யப்பட்ட ஆதனமானது 14—6—1983 வீரகேசரியிலும் 24—10—1983 டெய்லி நியூஸ் பத்திரிகையிலும் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

என்னால் இவ் ஆதனமானது,

1984ஆம் ஆண்டு வைகாசி மாதம் 23-ந் திகதி (23—5—1984 புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மேற்குறித்த எதிராளிகள் ரூபா 43261/8 சதம் மேலும் ரூபா 40,000/ க்கு 1—9—1982 முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு 14, ½ % வட்டி ஆகியன செலுத்தப்பட வேண்டும்.

### குறித்த ஆதனடாப்பு

வடமராட்சி, யாழ்ப்பாணம் டிஸ்திறிக், தீவுப்பகுதி, ஊர்காவற்றுறை கோவிற்பற்று சரம்பன் இறை "புங்கம்புலம்" தெற்பரப்பு இலாச்சல் நாற்பது (நெ. வ. இலா. 40) ஆனால் 11—3—78ல் உத்தரவு பெற்ற நில அளவையாளர் வி. என். தேவராஜாவினால் தயாரிக்கப்பட்ட 7-ம் இலக்க வரைபடத்தின்படி தெற்பரப்பு இலாச்சம் நாற்பதும் குளி மூன்றும் (நெ வ. இலா 40 குளி 3) இதற்கு எல்லை கிழக்கு எம். இளையதம்பியினதும் சரம்பன் கந்தசுவாமி கோவிலினதும் ஆதனங்கள் அல்லது தற்போது கே. வைத்தியநாதனின் உரிமையாளரினதும் சரம்பன் கந்தசுவாமி கோவிலினதும் ஆதனங்கள், வடக்கு நாகரட்ணம் பெண் நாகமுத்துவின் ஆதனம், தற்போது தர்மலிங்கம் பெண் மனோன்மணியினதும் முருகேசு பெண் தங்கம்மாவினதும் ஆதனங்கள், மேற்கு நாகரட்ணம் பெண் நாகமுத்துவின் ஆதனம், தற்போது ஒழுங்கை, தெற்கு முருகேசு இளையதம்பியின் ஆதனம், தற்போது பாலகிருஷ்ணன் பெண் இலச்சுமிதேவியினதும், சந்திரராஜா பெண் மகேஸ்வரியினதும் ஆதனம், இடையிலுள்ளதும் இதற்குள் இருக்கும் இணறும் யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் இல ச. 162/119இல் பதியப்பட்டுள்ளது

சி. ஆ. த. வடிவேலு ஜே. பி.,
(L. I. V., S. C. V.,)
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்,
ஏல விற்பனையாளரும்.

"வடிவேல் உதயம்",
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில்,
23—3—1984. [1648]

## வைபவம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறவிருந்த யாழ். இந்துக் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் திரு. பி. எஸ். குமாரசுவாமியின் பிரியாவிடை வைபவம் மறு அறிவித்தல்வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்கநிலைப்பள்ளியால் இன்று நடாத்தப்படவிருந்த வருடாந்த இல்லவிளையாட்டுப்போட்டி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பள்ளி அதிபர் தெரிவித்துள்ளார்.

## கருத்தரங்கு

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாணமாவட்ட உபதபாலதிபர்களுக்கான நிர்வாக ஒழுங்குகள் தொடர்பான கருத்தரங்கொன்று அடுத்த மாதம் 29-ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றது இதற்கான ஏற்பாடுகளை வடமாநில தபால் அத்தியட்சகர் மேற்கொண்டுள்ளார்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றில்

அளவெட்டி தெற்கு என்னுமிடத்தைச்சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி விக்னேஸ்வரா என்பவரின் மரணசாதனமில்லாத மரணச் சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர் விக்னேஸ்வரசர்மாபெண் சேதலட்சுமி, அளவெட்டி தெற்கு, அளவெட்டி
-மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. ரி / 184

எதிர்

1. விக்னேஸ்வரா மகள் ஜெயந்தி
2. விக்னேஸ்வரா ஜெயசசா (பராயமற்றவர்)
3. விக்னேஸ்வரா மகள் துஷ்யந்தி (பராயமற்றவர்)
4. சின்னத்தம்பி மகேஸ்வரா (பராயமற்ற 2ம், 3ம் எதிர்வாதிகளின் பாதுகாவலர்) எல்லோரும் அளவெட்டி தெற்கு

எதிர்மனுதாரர்கள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும், 1984ம் ஆண்டு சித்திரை மாதம் 4ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1984ம் ஆண்டு பங்குனி மாதம் 20ந் திகதி நீதிமன்றக்கட்டளைப்படி,

ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
பதிவாளர்.

தயாரித்தவர்:
செ. புண்ணியமூர்த்தி,
மனுதாரின் சட்டத்தரணி.

1645

# இந்திய ராஜ்ய சபாத் தேர்தல்:

# இந்திரா காங்கிரஸ் பெரு வெற்றி!

புதுடில்லி, மார்ச் 30

இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்திய ராஜ்ய சபாவுக்கான தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சி பெருவெற்றி பெற்றுள்ளது.

மொத்தம் 72 இடங்களுக்கு நடைபெற்ற தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சி 47 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.

இத்தேர்தலில் தெலுங்கு தேசக் கட்சி 5 ஆசனங்களைப் பெற்று இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. ராஜ்ய சபாத் தேர்தலில் அ. தி. மு. க. 4 இடங்களிலும், தி. மு. க. ஒரு இடத்திலும் வெற்றிபெற்றுள்ளன.

244 ஆசனங்களைக் கொண்ட ராஜ்யசபாவில் ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சி மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறுவதற்கு அதற்குப் பத்து ஆசனங்கள் குறைவாகவுள்ளது. (வெ)

## பிரதமர் இந்திராவுக்கு நெடுமாறன் கோரிக்கை

சென்னை, மார்ச் 30

தமிழர்களுக்கு எதிராக இலங்கையில் மேற்கொள்ளப்படும் படுகொலைகளைத் தடுத்து நிறுத்துமாறு தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு பி. நெடுமாறன் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியிடம் கேட்டுள்ளார்.

இந்தவிடயத்தில் இந்தியாவிலுள்ள எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றுசேரவேண்டுமென்றும் திரு நெடுமாறன் கோரிக்கை விடுத்துள்ளார். (வெ)

## சட்டக் கல்லூரி மாணவர் கண்டன ஊர்வலம்

சென்னை, மார்ச் 30

தமிழர்களுக்கு எதிராக இலங்கையில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு ஆட்சேபம் தெரிவித்து சென்னை சட்டக்கல்லூரியைச் சேர்ந்த 250க்கும் மேற்பட்ட மாணவர்கள் சென்னையிலுள்ள இலங்கைத் துணைத் தூதரகத்திற்கு ஊர்வலமாகச் சென்றனர். (வெ)

## "தீவிரவாதிகளின் வன்செயல்களை ஒடுக்க அரசு நடவடிக்கை"

### இந்திய உள்துறை அமைச்சர்

புதுடில்லி, மார்ச் 30

"இந்தியாவில் தீவிரவாதிகளின் வன்செயல்களை ஒடுக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது. ஜம்மு காஷ்மீர் பிரிவினைவாத சக்திகள் அரசுக்கு எதிரான நாசவேலைகளில் ஈடுபட்டுவருகின்றன."

இவ்வாறு இந்திய உள்துறை அமைச்சர் திரு பி. சி. சேத்தி நேற்று லோகசபையில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"பொற்கோயிலுக்குள் தீவிரவாதத் தலைவர்கள் பலர் ஒழித்து வசிக்கின்றனர். பொற்கோயிலுக்குள் பொலிசார் நுழைய சட்டப்படி தடையில்லை.

"பஞ்சாப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதில் தீவிரவாதிகள் அரசுடன் ஒத்துழைக்கவில்லை. வன்முறைகள் நாட்டின் எந்தப் பகுதியில் தலைதூக்கினாலும் அதனை ஒழிப்பதற்கு அரசு தயங்காது" என்றார். (வெ)

## பங்களாதேஷ் புதிய பிரதமர்

டாக்கா, மார்ச் 30

பங்களாதேஷின் புதிய பிரதமமந்திரியாக ரகுமான் ஹான் அந்நாட்டு ஜனாதிபதி ஜெனரல் முகமது எர்ஷாத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

75 வயதுடைய ரகுமான் ஹான் பங்களாதேஷின் பதினொரு கட்சிகளைக் கொண்ட கூட்டணியின் தலைவராவார்.

பங்களாதேஷில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட அரசியல், பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சுக்கும் இவர் பொறுப்பாகவிருப்பார்.

அதேவேளை பங்களாதேஷில் பொதுத்தேர்தல் நடத்தப்பட்ட பின்னரே தங்கு இராணுவச் சட்டம் நீக்கப்படும் என்று ஜனாதிபதி எர்ஷாத் தெரிவித்துள்ளார். (வெ)

## எழுத்தாளர் 'துமிலன்' காலமானார்

சென்னை மார்ச் 30

பிரபல தமிழ் எழுத்தாளரான 'துமிலன்' என்றழைக்கப்படும் ராமசாமி நேற்றுச் சென்னையில் காலமானார். இறக்கும் போது அவருக்கு 83 வயதாகும். (வெ)

## "சிறப்பாக இயங்கும் கைதடி முகாம்" - அரசாங்க அதிபர் பாராட்டு

[சாவகச்சேரி]

"அகதிகள் முகாம்களில் தங்கியிருக்கும் மக்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் தங்கியிருக்க விரும்பினால் தங்கியிருக்கலாம். அவர்களை யாரும் பலவந்தமாக வெளியேறும்படி கேட்கமுடியாது. யாழ் மாவட்டத்தில் இயங்குகின்ற அகதிகள் முகாம்களில் மிகவும் சிறந்ததொரு முகாமாக கைதடி அகதிகள் முகாம் விளங்குவது மிகவும் மகிழ்ச்சி தருவதாகவுள்ளது."

இவ்வாறு யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா கைதடி அகதிகள் முகாமில் தென்மராட்சி அகதிகள் புனர்வாழ்வுத்திட்டமும் அறவழிப் போராட்டக்குழுவும் இணைந்து நடத்திய சேவை நலன் பாராட்டு விழாவில் பதிலுரை வழங்குகையில் கூறினார்.

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு க. துரைராஜா தலைமையில் சேவை நலன் பாராட்டுவிழா நடைபெற்றது.

முகாமின் இணைப்பதிகாரி திரு. பி. ஜே. அருள்நாயகம் தமது பாராட்டுரையின்போது "கலவரத்தால் பாதிக்கப்பட்டு காங்கேசன்துறைமுகத்தில் கப்பல் மூலம் வந்து சேர்ந்த அகதிகளுக்கு அரசாங்க அதிபர் ஆற்றியசேவை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது" எனக் கூறினார்.

அகதிகளின் சார்பிலும் அறவழிப்போராட்டக்குழு சார்பிலும் அரச அதிபரின் சேவையைப் பாராட்டி அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்பட்டன.

திரு. நா. கந்தையா நன்றியுரை வழங்கினார்.


## ஹோம் பிறின்ஸ் லிமிட்.

உல்லாச பஸ் சேவை

தினசரி மாலை 7-00
யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு
தினசரி மாலை 7-45
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு

கண்ணியமான - பாதுகாப்பான பஸ் சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

1 ஹோம் பிறின்ஸ் லிமிட்.
இல: 82, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24810

2 நியூ ப்ரசிதா
இல: 337, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 22480


3 நியூ லங்கா அலுமினியம் இன்டஸ்றீஸ்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23596

4 யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 22537, 22370

கொழும்பில் டிக்கட் பெறுமிடங்கள்

1 ஹோம் பிறின்ஸ் லிமிட்.
463, காலி வீதி,
கொழும்பு-6
தொலைபேசி: 589190—587680

2. டையமன் ஸ்ரோர்ஸ்
வெள்ளவத்தை



நெஸ்டமோல்ட்

"நெஸ்கியூறிற்றி பெக்ட்"

பந்திக்குமுந்தி ஆளுக்கு ரூ 100 பரிசு பெறுவோர்

3-ஆவது வார வெற்றியாளர்கள் (26-3-84-ம் திகதி வரை வந்து குவிந்த விண்ணப்பங்களிலிருந்து.)

ஆர். யோகராஜா, திருகோணமலை
டி. டபிள்யூ டி. சில்வா, பனாகொட
ஏ. ஜி எம். சேனாவிக்க, ஹிங்குறக்கொட
எம். எம். அருணாசலம் பிள்ளை, வவுனியா.
ஆர். விதாரணகே, நுகேகொட.
திருமதி ஈ. பெர்னாண்டோ, நுகேகொட.
சுலைமா மன்சூர், கம்பளை
ஜே எம். இக்பால், கஹற்றபிட்டிய
கி. பொன்சேகா, பேருவல.

சி. பி. மீப்பே, கட்டுவெத்த.
வை. ஜி. இரத்நாயக்கா, காலி.
எல். இரத்நாயக்கா, மாத்தளை.
எம். ஈ. டி. எம். ஏச். ஆர். பஷால், கிருலப்பனை.
ஆர். பி. கே. பி. ரத்நாயு, இறுக்கை.
எம். டி. பெர்னாண்டோ, சிலாபம்.
எஸ். திருச்செல்வம், காங்கேசன்துறை.
ஜே.ஜே.ஜே. பரணவிதான, நீர்கொழும்பு.

கே. ராதா, மொறட்டுவ.
செல்வி ஏ எல். கலாஜினி, கிளிநொச்சி.
எல். டபிள்யூ. எஸ். வெலியங்க, கண்டி.
எஸ். எம். ஏ. கபூர், கல்முனை.
ஜி செல்லஹேவா, தெமோதர.
ஈ. கே. பெரேரா, பலப்பிட்டிய.
பி. எஸ். விஜயசிங்க, பதுளை.
ஜி. ஜி. கே. சமன்கெலும், மிரிஸ்ஸ

அவ்வப்போது வெற்றிபெறுவோர் ஒவ்வொருவருக்கும் ரூ 100/- க் கான 'நெஸ்கியூறிற்றி' காசோலை இரண்டு வாரத்துள் அனுப்பிவைக்கப்படும்.

நெஸ்டோமோல்ட் - உங்கள் வாழ்க்கையைக் கொண்டு செலுத்த உகந்த பானம்

# இன்றைய பலன்

பல்குனி மாதம் 13-ம் திகதி
(31—8—84)
சனிக்கிழமை

மேடம்: தொழில்புரியுமிடத்தில் கருத்துவேற்றுமை தோன்றக்கூடும் கொடுக்கல் வாங்கல் மூலம் எதிரிகளைத் தேடிக் கொள்வீர்கள்.

இடபம்: பேச்சுவன்மையால் பெரும்புகழ் கிடைக்கும் பெரிய இடத்துச் சகவாசம் உங்களுக்குச் செல்வாக்கைத் தேடித் தரும் சிலருக்கு அதிர்ஷ்டவாய்ப்பும் கிடைக்கும்.

மிதுனம்: உடல்நலம் சிறிது பாதிக்கப்படும் வைத்திய வழிகளில் பணம் செலவாகும் சகோதரவழியால் சஞ்சலத்துக்கு இடமுண்டு எண்ணிய கருமத்தில் தடை ஏற்படும்.

கடகம்: வாகனம் செலுத்துபவர்களுக்கு இன்று நல் மதிப்புக் கிடைக்கும் தாய்வழித் தனவரவிற்கும் இடமுண்டு முன்னேற்றமான சுபதினமாகும்.

சிம்மம்: இதயத்தின் ஏக்கம் இன்று தணியும் தேடிய பொருள் இன்று காலடியில் சரணடையும் பரோபகார சிந்தை மேலிடும் நண்பர் ஒருவருக்கு கைகொடுத்துதவுவீர்கள்.

கன்னி: வைராக்கியத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள் சிறிய விடயத்திற்குக்கூட குறைகேட்க நேரிடும் தடுப்பதற்கு எதிரிகள் முனைவர்.

துலாம்: தாம்பத்திய வாழ்க்கையில் மகிழ்ச்சி காணப்படும் குடும்பத்தில் தென்றல் வீசும் சுவையான நிகழ்ச்சிகள் இடம் பெறும் அறிஞர்களுக்கு இன்று சுபதினம்.

விருச்சிகம்: அதிக நம்பிக்கை ஆபத்தைத் தேடித்தரலாம் தன்னைவே தனக்குதவியென்று செயலாற்றவும் மறைமுக உறவு விடயத்தில் பிரிவுக் குறைவு ஏற்படும்.

தனுசு: இறைவழிபாடுவேண்டும் இதன்மூலம் இல்லத்தில் அமைதியும் ஏற்படும் முதியவர் ஒருவர் தக்க சமயத்தில் உங்களுக்கு ஆதரவுதருவார்.

மகரம்: உத்தியோக உயர்வுக்கும் உரிமைகளைப் பெறுவதற்கும் உகந்தநாள் கவர்ச்சிகரமான பொருளை வாங்குவதிலும் அதிக கவனம் செலுத்துவீர்கள் இடமாற்றமும் ஏற்படலாம்.

கும்பம்: புதுமையான சம்பவங்கள் இடம்பெறும் சிலருக்கு அதிர்ஷ்டலாபங்களுக்கும் இடமுண்டு விருந்தினர் வருகை உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

மீனம்: நடையில் தயக்கம் ஏற்படும் உங்கள் விடயத்தில் இன்று உரிமையும் ஊமையாகி விடும் உடல்நலம் சிறிது பாதிக்கப்படும்.

திருமலை வே. ரவீந்திரன்

# செய்திச் சிதறல்

## நமது நிருபர்கள்

### வட இலங்கை ஹோமியோபதி சங்க வெள்ளி விழா

(பண்டத்தரிப்பு)

வட இலங்கை ஹோமியோபதி வைத்தியர்கள் சங்கம் தமது 25 வருட நிறைவைக் கொண்டாடும் முகமாக வெள்ளிவிழாவொன்றை வரும் ஏப்ரல் மாத இறுதியில் யாழ். நகரில் நடாத்துவதற்குத் தீர்மானித்துள்ளது. ஹோமியோபதி வைத்தியத்தின் தந்தையான டாக்டர் சாமுவேல் ஹனிமனின் 229 ஆவது பிறந்ததினமும் இவ்விழாவுடன் இணைந்து கொண்டாடப்படவுள்ளது. வெள்ளிவிழா மலர் ஒன்றும் வெளியிடப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

### மருத்தித்துறையின் கீழ் வந்தது

(பச்சிலைப்பள்ளி)

பளை உதவி அரசாங்கஅதிபர் பிரிவின் கீழிருந்த 4 கிராம சேவையாளர் பிரிவுகளை பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் கையேற்றார்.

பளை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இவ்வைபவம் நடந்தது. பளை உதவி அரசாங்க அதிபர் திரு. முருகவேள் அவர்களிடமிருந்து பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வேலும்மயிலும் அவர்கள் இந்த 4 கிராம சேவையாளர் பிரிவுகளையும் பொறுப்பேற்றார். செம்பியன் பற்று, மருதங்கேணி, முள்ளியான், சுண்டிக்குளம் ஆகியவையே இவை.

### செம்பியன்பற்றில் புதிய அலுவலகம்

[பச்சிலைப்பள்ளி]

பருத்தித்துறை - கிழக்கில் சுற்று உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இந்த அலுவலகம் செம்பியன்பற்றில் திறக்கப்படவுள்ளது.

### வீடமைப்புக் கடன்

(மன்னார்)

பிரதமரின் பத்து லட்சம் வீடுகள் அமைக்கும் திட்டத்தின்கீழ் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 84 கிராமோதய சபைப் பிரிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு வீடமைப்புக்கடன் வழங்கப்பட்டு வருகிறது.

### பிரார்த்தனை

(மன்னார்)

பொலிஸ் தினத்தை முன்னிட்டு மன்னார் பொலிசாரினால் சர்வமதஆலயவழிபாடும், பிரார்த்தனையும் நடத்தப்பட்டது. இவ்வைபவத்தின்போது தலைமன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. கே. அரசரத்தினம் தலைமையில் கடமை நேரத்தில் உயிர்துறந்த பொலிசாரின் நினைவாகத் தலைமன்னார் அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளுக்கு மதியபோசனம் வழங்கப்பட்டது.

### அன்பளிப்பு

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் சுழிபுரம் காட்டுப்புலம் கிராமத்திலுள்ள சிறுவர் பாடசாலைக்கு கதிரை, வாங்கு, மேசை ஆகிய தளபாடங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. அண்மையில் யாழ். மாவட்டத்திற்கு விஜயம் செய்த லயன்ஸ் மாவட்ட ஆளுநர் டாக்டர் யாமி இஸ்மயில் இத்தளபாடங்களை வட்டு லயன்ஸ் கழகத்தின் சார்பில் மேற்படி சிறுவர் பாடசாலை ஆசிரியரிடம் கையளித்தார்.

### வல்வெட்டி அபிவிருத்திசங்க நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

வல்வெட்டி கிராம அபிவிருத்தி சங்க வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்

போசகர்கள்; உடுப்பிட்டி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. த. இராசலிங்கம் முன்னாள் மாவட்ட சபை உறுப்பினர் திரு. மு. தம்பிமுத்து. திரு ஆ. சுப்பிரமணியம் தலைவர் திரு. வே. செல்லத்துரை உபதலைவர்கள் திரு. செ. இராமசாமி திரு சு. சின்னராசா செயலாளர் திரு. சி. சேனாதிராசா பொருளாளர் திரு. க. சின்னத்தம்பி 5 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

(சூ)

### ஏற்பாடு

(வண்ணார்பண்ணை)

பத்துலட்சம் வீட்டுத்திட்டத்தின்கீழ் தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள புங்குடுதீவு கிழக்கு புங்குடுதீவு மத்தி ஆகிய பகுதிகளில் விண்ணப்பித்து முதல் தரத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான காசோலைகள் உடன் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இப்பகுதி விஷேட சேவை அலுவலர் தெரிவித்தார்.

### புதிய நிர்வாகிகள்

(புலோலி)

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கப்பொதுக்கூட்டம் அதிபர் திரு. ஏ. கே. மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது நடப்புவருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராக திரு. ஏ கே. மாணிக்கம் [அதிபர்] செயலாளராக திரு. எஸ். சிவசுப்பிரமணியம் பொருளாளராக திரு. பீ. செல்லையாவும் செயற்குழு உறுப்பினர்களாக திரு. கே. துரைராசா திரு. சிவா கிருஷ்ணமூர்த்தி திரு. ரீ சிவராசா செல்வி எம். முத்துச்சாமி ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.





- ஐரொப்பா முழுவதும் சிறுவர்கள் அதிகமாக விரும்பும் கோல்டன் கேட் வழமை போல் அதன் எளிமையான உறையிலேயே வருகிறது.
- செழுமையானது போஷாக்கு நிறைந்தது பாண் பிஸ்கட் பணிஸ் போன்றவற்றுடன் அதன் சுவையோ மதுரமானது.
- கோல்டன் கேட் கொண்டு அம்மா சமைத்த உணவின் சுவை. ..... அபாரம்.
- கைக்கு அடங்கிய விலையில் கூடுதல் அளவில் 250 கிறும் மாகரீன். உறை நீங்கலாக ரூபா 11.75 மட்டுமே.
- வளரும் உங்கள்.குழந்தைகள் ஆரோக்கியமும் அதிக சக்தியும் பெறுவதற்குப் பாவியுங்கள் கோல்டன் கேட்.........

# கோல்டன் கேட்

## மாகரீன்

குழந்தைகள் உங்கள்மிது கொள்ளை ஆசை கொள்வர்

சந்தைப்படுத்துவோர்
அமினுஸ் இன்டர்நாஷனல் லிமிட்டட்
482 டாக்டர். டி. பீ. ஜயா மாவத்தை, (டாலி றோட்) கொழும்பு-10,
தொலைபேசி. 596385 – 91699

TEAM

**லிடோ** (யாழ். நகர்)
[illegible] 3-30, 6-00
கமலஹாசன்-லக்ஷ்மி நடித்த
சகலகலாவல்லவன்

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
நீதிதேவன்
விரைவில்
தங்கச் சுரங்கம்

**சாந்தி** (யாழ். நகர்)
31 - 1
10-30, 2-30, 6-30 மட்டும்
எம். ஜி. ஆர் சாவித்திரி
நாகேஷ் நம்பியார்
வேட்டைக்காரன்
புதிய பிரதி

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
அநேகரின்
வேண்டுகோளுக் கிணங்க
திரையிடப் படுகின்றது.
எம். ஜி. ஆர்.
சரோஜாதேவி, நாகேஷ்
'அன்பே வா'
(கலர் புதிய பிரதி)

[illegible] கடைசி வாரம்
**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
9-00
[illegible] — ஸ்ரீதேவி — தீபா
மீண்டும்கோகிலா
(ஈஸ்ட்மன் கலர்)

**ஹரன்** (யாழ். நகர்)
10-30, 2-30, 7-15, 9-30
Sean Connery in
A BRIDGE TOO FAR
(Color)
DOGS OF WAR வா?
BRIDGE TOO FAR வா?
நீங்களே ஒப்பிட்டுப்
பாருங்கள்!

மகத்தான
91வது மகளிர் தினம்
**நீகல்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15.
பயணங்கள்
முடிவதில்லை
கடைசி சந்தர்ப்பம்

கடைசி சில தினங்கள்
மட்டும்
**ராணி** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
கமலஹாசன்-ராதிகா
டிக் டிக் டிக்
(ஈஸ்ட்மன்கலர்)

**மனோகரா** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
ஜெமினி-சாவித்திரி
ராதா நடித்த
ஹலோ மிஸ்டர்
ஜமீந்தார்



ஆவரங்கால் மரக்காலை
AVARANKAL TIMBER DEPOT
காட்டுவிறகு மொத்தமாகவும் சில்லறையாகவும்
விற்பனைக்குண்டு
சிவன்கோவில் வீதி, ஆவரங்கால். 1642



UDUVIL GIRLS' COLLEGE
OPERETTA
The Lass That Loved A Sailor
POSTPONED
Principal,
Uduvil Girl's College
(1673)



யாழ் இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

இளைப்பாறிய அதிபர் திரு. P S. குமாரசாமி அவர்களுக்கு இன்று (31-3-84) சனிக்கிழமை அளிக்க இருந்த பிரியாவிடை வைபவம் தவிர்க்கமுடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது'

செயலாளர்
செ. இ. இராகுலன்.
(1678)


## கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி கோஷ்டிக்கும், யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி கோஷ்டிக்குமிடையிலான '40 ஓவர்' கிரிக்கெட் போட்டி ஒன்று யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது



கப்டன் எம். பரமலிங்கம்

யாழ்ப்பாணக் கல்லூரிக் கோஷ்டிக்குத் தலைமைதாங்கும் எம. பரமலிங்கம் சிறந்த பந்து வீச்சாளராவார். இவர் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு எதிராக அண்மையில் நடைபெற்ற வருடாந்தக் கிரிக்கெட் போட்டியில், சகலதுறையிலும் சிறந்த வீரருக்கான விருதைப் பெற்றவர்.

சென். பற்றிக்ஸ் கல்லூரிக் கோஷ்டிக்கு தலைமைதாங்கும் பி. எஸ். எம். அரியராஜா சிறந்த அடிப்பாட வீரரும், பந்து வீச்சாளருமாவார். இவர் யாழ். மத்திய கல்லூரிக்கும் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் ஆட்டமிழக்காது 134 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

வட மாகாணக் கல்லூரிகளிடையே இதுபோன்ற போட்டி நடைபெறுவது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (வெ-வி)


**லிடோ** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரவீந்தர் ரூபா
ஒரு தலை ராகம்

**வெலிங்டன்**
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி (இருவேடம்)
மஞ்சுளா
எங்க தங்க ராஜா
(புதிய பிரதி)



யா/பருத்தித்துறை மெதடிஸ்த
பெண்கள் உயர்தர பாடசாலை
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

மேற்படி பாடசாலையின் பா. அ. சங்கத்தின் 31-3-84ல் நடக்கவிருந்த வருடாந்த பொதுக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என இத்தால் அங்கத்தவர்களுக்கு அறிவிக்கப்படுகிறது. புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

இ. ஸ்ரீசிவாயா
செயலாளர்.
(1670)



அரியதோர் சந்தர்ப்பம்

சீயோன் தேவாலயம், 24, இராமையாச் செட்டியார் ஒழுங்கை ஏப்ரல் மாதம் முதலாம் திகதி ஞாயிறு காலை 1-4-84 9 மணிக்கு தேவமனிதன் கலாநிதி ஹேர்ப் மியூரோட் (Dr. Herb Mjorud) தேவ செய்தியை கொண்டு வருவார். மூன்றுமுறை புற்றுநோய் அறுவைச்சிகிச்சையின் பின்னர் வைத்தியர்களால் குணமாக்கமுடியாதென கைவிடப்பட்ட இவர் தேவரைத்தால் குணமாக்கப்பட்டு தேவனுக்காக தன்னை அர்ப்பணம் செய்துகொண்டவர். தேவ சமூகத்திற்கு உங்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

(1616)



சுவை மிகும் மூன்று
யானை மார்க்
குளிர் பானங்கள்
ஒரேஞ்
லைம்
லெமன் கிரஷ்




வெய்யில் வேகமா?
தண்ணீர்த் தாகமா?
குளிர்ச்சியும்
மலர்ச்சியும் தரும்
சுத்தமான பழச்சுவை
மிகும் யானை மார்க்
குளிர் பானங்கள்
பருகுவீர்
எங்கும் எந்த
வேளையும், உருசி
மிகும் சிலிர் சுவையூட்டும் ஒரேஞ், லைம்,
லெமன் கிரஷ்,
பருகச்சிறந்த
யானை மார்க் குளிர்
பானங்கள்!

ஒரேஞ், லைம், லெமன் கிரஷ் - எந்த வேளைக்கும் ஏற்றவை.
வ. மா. விலை 2/20
RJA - 1328
CCS சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்



மீண்டும் சென்னை, ரூபவாஹினி நிகழ்ச்சிகளைத் தெளிவாகக் கண்டுகளிக்க
உத்தரவாதத்துடன் 'அன்ரனா' பொருத்திக்கொள்ளவும்
மங்கள வைபவங்களை வீடியோவில் படம் பிடித்துக்கொள்ளவும்
சகலவித றேடியோ, ரி. வி., டெக், மணிக்கூடுகள் பழுதுபார்த்துக்கொள்ளவும்

வீனஸ் 266/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (ஸ்ரீதர் தியேட்டர் அருகாமை)
நியூ வீனஸ் 69/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

